செ.வெ.எண்.93 நாள்: 23.07.2019

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் ஒன்றியம் சாஸ்தாவிநல்லூர் ஊராட்சி நறையன்குளத்தில் ஜல்சக்தி அபியான் திட்டத்தின்கீழ் புதிய குளம் அமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களுடன் சென்று தொடங்கி வைத்தார். மேலும் அரசூர் ஊராட்சியில் மரக்கன்று நடும் திட்டத்தினை தொடங்கி வைத்து மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை பார்வையிட்டார்.

---

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் ஒன்றியம் சாஸ்தாவிநல்லூர் ஊராட்சி நறையன்குளத்தில் ஜல்சக்தி அபியான் திட்டத்தின்கீழ் புதிய குளம் அமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களுடன் சென்று தொடங்கி வைத்தார். மேலும் அரசூர் ஊராட்சியில் மரக்கன்று நடும் திட்டத்தினை தொடங்கி வைத்து மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை பார்வையிட்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களுடன் தெரிவித்ததாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் மத்திய அசின் ஜல்சக்தி அபியான் திட்டம் பொதுமக்களின் பங்களிப்புடன் ஊருக்கு நூறு கை திட்டத்துடன் இணைந்து சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது. மழைநீரை சேமிப்பதன் அவசியம் உங்கள் அனைவருக்கும் தெரியும். இப்பகுதியில் மழைநீரை அதிக அளவில் சேமிப்பதால் அருகில் கடற்கரை உ்ளளதால் உப்புநீர் உள்ளே வராமல் தடுக்க முடியும். ஊருக்கு நூறு கை திட்டத்தில் அதிக அளவிலான பொதுமக்கள் பங்களிப்புடன் குளங்கள் தூர்வாறும் பணிகள் நடைபெற்று வருகிறது. ஜல்சக்தி அபியான் திட்டத்தில் நிலத்தடி நீரை அதிகரிக்கும் வகையில் குளங்களை தூர்வாறுதல், அதிக அளவு மழை பெறும் வகையில் மரக்கன்றுகள் நடுதல், அலுவலகங்கள் மற்றும் வீடுகளில் மழைநீரை சேமிப்பு அமைப்புகளை ஏற்படுத்துதல், கிராம பகுதிகளில் உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு செய்து விவசாயத்திற்கு பயன்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. நறையன்குளத்தில் இத்திட்டத்தில் புதிதாக குளம் அமைக்கப்படுகிறது. குளம் அமைத்திட திரு.வரதராஜன், திரு.சற்குணம் ஆகியோர் 1.76 ஏக்கர் நிலத்தினை தானமாக வழங்கியுள்ளனர். அவர்களுக்கு நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் பொதுமக்கள் பங்களிப்புடன் டிராக்டர், ஜே.சி.பி இயந்திரங்கள் வரழைக்கப்பட்டுள்ளது. இந்த புதிய குளம் 3 ¼ ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படவுள்ளது. குளத்திற்கு அமைக்கப்படும் புதிய கறைகளில் அதிக அளவிலான மரக்கன்றுகள் நடவு செய்யப்படவுள்ளது. பல்வேறு குளங்கள் புனரமைத்தாலும் இங்கு புதிய குளத்தினை உருவாக்குவதும் சிறப்பானதாகும். புதிய குளம் அமைக்கும் பணிகள் ஒரு மாத காலத்திற்குள் சிறப்பாக முடிக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து அரசூர் ஊராட்சி பகுதியில் மரக்கன்று நடும் பணிகளை மரக்கன்று நடவு செய்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்தார். அங்கு அதிக அளவில் பள்ளி மாணவ, மாணவிகள் வருகை தந்து அவர்களும் மரக்கன்றுகளை நடவு செய்தார்கள். தொடர்ந்து அரசூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், இடைச்சிவிளை ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, குமரன்வளைவு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்ட மழைநீர் சேகரிப்பு அமைப்பகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார். மேலும் ரத்னபுரி பகுதியில் பயன்படுத்தப்படாத ஆழ்குழாய் கிணற்றில் மழைநீர் சேமிக்கும் அமைப்பினையும் பார்வையிட்டார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திரு.தனபதி, திருச்செந்தூர் கோட்டாட்சியர் செல்வி.தனப்ரியா, வட்டாட்சியர் திரு.ஞானராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பாலசுப்பிரமணியன், திருமதி.செல்வி, பணி மேற்பார்வையாளர்கள் திரு.ரவிச்சந்திரன், திரு.விஜயராகவன், விவசாய சங்க தலைவர்கள் திரு.பால்துரை, திரு.லூர்துமணி, திரு.இளங்கோவன் ஆகியோர் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.